# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.

தொலைபேசி: 044 – 22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

இணையதள முகவரி : www.tnlbo.tn.gov.in


**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண்.178 /பேரூ/2023

நாள்: 15.7.2023

திரு. ச. சேம்ரூபன்,
கோணம்காடு,
கன்னியாகுமரி மாவட்டம் ... மனுதாரர்

செயல் அலுவலர்,
கல்லுக்கூட்டம் பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம் ... எதிர்மனுதாரர்

கன்னியாகுமரி மாவட்டம், கோணம்காடு என்ற முகவரியைச் சேர்ந்த திரு.ச.சேம்ரூபன் என்பவரது 06.06.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 08.06.2023 அன்று பெறப்பட்டு, 178/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கன்னியாகுமரி மாவட்டம், கோணம்காடு என்ற முகவரியைச் சேர்ந்த திரு. ச. சேம்ரூபன் என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுகா, கல்லுக்கூட்டம் பேரூராட்சிக்குட்பட்ட மண்டைக்காடு மாசிக்கொடை விழாவை முன்னிட்டு பேரூராட்சியால் செய்யப்பட்ட கழிவறை பராமரிப்பில் பின்வரும் முறைகேடுகள் நடந்துள்ளன, செலவு செய்யாமலேயே செலவுச்சீட்டு மூலம் பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

1) செலவுச்சீட்டு எண். 556 : கழிப்பறையின் கழிவுகள் அகற்றப்படவில்லை, டேங்கர் லாரி பயன்படுத்தப்படவே இல்லை. கழிவுநீர் தொட்டி திறக்கப்படவே இல்லை. கழிவுநீர்த்தொட்டி புதர் மண்டிக்கிடக்கிறது. ஆனால் ரூ.9800/– செலவு செய்யப்பட்டதாக கணக்கு காட்டியுள்ளனர்.

2) செலவுச்சீட்டு எண்.560 : புதிய பிவிசி கதவின் மதிப்பு ரூ.4,400/– ஆனால் ரூ.9300/– செலவு என்று கணக்கில் உள்ளது.

3) செலவுச்சீட்டு எண்.569: கழிவறை பழுதுபார்க்கப்படவில்லை. பெயிண்ட் அடிக்கவில்லை ஜனதாசம் எனப்படும் பொடிவகை, கை தொட்டால் ஒட்டிக் கொள்ளும் நிலையில் உள்ளது.

4) செலவுச்சீட்டு எண். 571 : கழிவறையின் கான்கிரீட் மேற்கூரை அப்படியே உள்ளது, கீற்றுகள் மாற்றப்படவில்லை. சிமெண்ட் பயன்படுத்தப்படவேயில்லை. மேலே கண்டபடி கழிவறை பழுதுபார்ப்புச் செலவு என்ற வகையில் ரூ.38000/– கணக்குகாட்டி முறைகேடு செய்துள்ளனர். எனவே கல்லுக்கூட்டம் பேரூராட்சி செயல் அலுவலர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 16.06.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் கல்லுக்கூட்டம் பேரூராட்சி செயல் அலுவலரிடம் அறிக்கை கோரப்பட்டது.

3) கல்லுக்கூட்டம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 26.06.2023 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

கன்னியாகுமரி மாவட்டம், மண்டைக்காடு பகுதியில் மிகவும் பிரசித்தி பெற்ற அருள்மிகு பகவதி அம்மன் திருக்கோவில் அமைந்துள்ளது. இக்கோவிலில் ஆண்டுதோறும் மாசிக்கொடை விழாநடைபெற்றுவருகிறது. இக்கொடை விழாவிற்கு தமிழ்நாடு, கேரளா மற்றும் அண்டை மாநிலங்களிலிருந்து பெருந்திரளாக மக்கள் வந்துசெல்வார்கள். மேற்படி திருக்கோவிலின் தெற்கு பக்கம் பக்தர்கள் கால்நனைப்பதற்கு கடலுக்கு செல்லும் பாதையின் மேற்கு பக்கம் அமைந்துள்ள பகுதி கல்லுக்கூட்டம் பேரூராடசிக்குட்பட்ட பகுதியாகும். இப்பகுதியில் நான்கு இருக்கைகள் கொண்ட கழிவறைகள் உள்ளது. இக்கழிவறைகள் ஆண்டுதோறும் மண்டைக்காடு மாசிக்கொடை விழாவின் போது மட்டுமே பாராமரிப்பு செய்து பயன்படுத்தப்படும் கழிவறைகளாகும்.

மண்டைக்காடு அருள்மிகு பகவதியம்மன் திருக்கோவில் மாசிக்கொடைவிழா 2023ஆம் ஆண்டு 05.03.2023 முதல் 14.03.2023 முடிய நடைபெற்றுள்ளது. மேற்படி மாசிக்கொடைவிழாவினை முன்னிட்டு அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. அச்சமயம் ஒவ்வொருதுறை மூலமாக செய்யப்படவேண்டிய மாசிக்கொடைவிழா முன்னேற்பாடுகள் குறித்து அறிவுரை வழங்கப்பட்டது. மேற்படி அறிவுரைகளுக்கிணங்க கல்லுக்கூட்டம் பேரூராட்சிக்குட்பட்ட மண்டைக்காடு புதூர் பகுதியில் அமைந்துள்ள நான்கு கழிவறைகள் பராமரிப்பு செய்யப்பட வேண்டியது அவசியமானது. அதன்படி புதூர் கழிவறைகளை சீரமைப்பு செய்ய கல்லுக்கூட்டம் பேரூராட்சி மன்ற தீர்மானம் எண் 239, நாள் 30.01.2023ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பின்னர் மண்டைக்காடு புதூர்

கழிவறைகள் பராமரிப்பு பணி செய்தும் கழிவறை இருக்கைகள் சுத்தம் செய்தும் பழுதுகள் சரி செய்தும், வர்ணம் பூசி, தண்ணீர் குழாய் வசதிகள் செய்தும் கதவுகள் மாற்றியும், கழிவறைக்குத் தேவையான பயன்பாட்டுப் பொருட்கள் வாங்கி வைத்தல் ஆகிய பணிகள் செய்யப்பட்டன.

பின்னர் மண்டைக்காடு மாசிக்கொடைவிழா நடைபெற்ற 10 நாட்களிலும் பொது சுகாதாரத்துறையின் வேண்டுகோளின்படியும், பொதுமக்களின் தொலைப்பேசி செய்தியின் படியும், பக்தர்களின் அடிப்படை சுகாதார நலன் கருதியும் மீண்டும் செப்டிக்டேங்க் சுத்தம் செய்யப்பட்டது. இப்பணிகள் அனைத்தும் செய்வதற்கு பேரூராட்சி மன்றத் தலைவரின் 20.02.2023 நாளிட்ட முன்அனுமதி பெறப்பட்டு கல்லுக்கூட்டம் பேரூராட்சி மன்ற தீர்மானம் எண் 302, 303, 304, 305 நாள் 27.03.2023ன்படி தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பின்னர் மேற்படி பணிகள் அனைத்தும் செய்த வகையில் கீழ்கண்ட விபரப்படி தொகை அனுமதித்து வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண். | செலுத்துச் சீட்டு எண். | தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1 | 556/10.03.2023 | 9800/- |
| 2. | 560/11.03.2023 | 9300/- |
| 3. | 569/16.03.2023 | 9600/- |
| 4. | 571/17.03.2023 | 9300/- |

எனவே கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரை மற்றும் நாகர்கோவில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் அறிவுரையின்படியும் எந்தவித புகாருக்கும் இடமளிக்காமல் தற்காலிகமாக மேற்படி கழிவறைகள் நல்ல முறையில் பராமரிப்பு செய்து பயன்படுத்தப்பட்டது. மேலும் திரு.ச.சேம்ரூபன், என்பவரின் புகார் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி இப்பணியில் முறைகேடுகள் எதுவும் நடைபெறவில்லை என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது என்று தெரிவித்துள்ளார்.

4)இம்முறைமன்ற 22.06.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோருக்கு இம்முறைமன்ற நடுவர் அவர்களின் நாகர்கோயில் முகாம் அலுவலகத்தில் 27.06.2023 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**5) 27.06.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் மனுதாரர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.**

"கன்னியாகுமரி மாவட்டம், கல்லுக்கூட்டம் பேரூராட்சிக்கு உட்பட்ட மண்டைக்காடு மாசிக்கொடை விழாவினை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கழிப்பறைகள் பேரூராட்சியினரால் பராமரிப்பதில்லை. அங்கு சேரும் கழிவுகளை பேரூராட்சியால் முறையாக டேங்கர் லாரிகளைக்கொண்டு அகற்றப்படவேயில்லை.

ஆனால் டேங்கர் லாரி செல்லாத இடத்தில் டேங்கர் லாரி கொண்டு அகற்றியதாக பேரூராட்சியினர் பொய்யாக கணக்கு காட்டியுள்ளனர். அங்குள்ள கழிவு நீர் தொட்டி புதர் மண்டி காணப்படுகிறது. (அதற்கான புகைப்படத்தினை இணைத்துள்ளேன்) மேற்கண்ட கழிவறைகளை முறையாக பராமரிக்காமல், கழிவறைகளை பராமரித்ததாகக் கணக்கு காட்டி, சுமார் 38 ஆயிரம் ரூபாயை பேரூராட்சியினரே கையாடல் செய்துள்ளனர். இதில் ரூபாய் 5 ஆயிரம் மட்டுமே பேரூராட்சியினர் செலவு செய்துள்ளனர்.

எனவே மேற்கண்ட கழிவறைகளை முறையாக பராமரித்திடவும், கழிவறைகளை சரியாக பராமரிக்காமல், அதற்கு செலவு செய்ததாக கணக்கு காட்டி, தொகையை கையாடல் செய்த பேரூராட்சி அலுவலர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுகொள்கிறேன்.

6) கல்லுக்கூட்டம் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் இளநிலைப்பொறியாளர் ஆகியோர் 27.06.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தமது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

கன்னியாகுமரி மாவட்டம் மண்டைக்காடு திருகோவிலுக்கு வரும் பக்தர்களின் வசதியை முன்னிட்டு நான்கு இருக்கைகள் கொண்ட கழிவறைகள் உள்ளன. இவை ஆண்டுதோறும் மாசிக்கொடை விழாவின்போது மட்டுமே பராமரிப்பு செய்து பயன்படுத்தப்படும் கழிவறைகளாகும். 2023–ம் ஆண்டு நடைபெற்ற மாசிக்கொடை விழாவை முன்னிட்டு மேற்கண்ட 4 கழிவறைகள் பராமரிப்பு அவசியம் ஏற்பட்டதை முன்னிட்டு பேரூராட்சியில் தீர்மானம் இயற்றப்பட்டு கழிவறைகள் பராமரிப்பு பணி செய்தும் கழிவறை இருக்கைகள் சுத்தம் செய்தும், கதவுகள் மாற்றியும் மற்றும் சுவரில் வர்ணம் பூசுதல் போன்ற பணிகள் நடத்தி முடிக்கப்பட்டன. மேற்கண்ட பணிகள் முடிக்கப்பட்ட வகையில் ரூபாய் 38 ஆயிரம் செலவு முறையாக மேற்கொள்ளப்பட்டது எனவும், இதில் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை எனவும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் எனது 26.6.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டு கொள்கிறோம்.

7) மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம் கல்லுக்கூட்டம் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் தமது புகார் மனுவில் மண்டைக்காடு மாசிக்கொடை விழாவினை முன்னிட்டு கல்லுக்கூட்டம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் கழிவறைகள் பராமரித்தல் என்ற வகையில் ரூ.38,000/– செலவு செய்ததாக கணக்கு காட்டி முறைகேடு செய்துள்ளார். கழிவுகளை டேங்கர் லாரி மூலம் அகற்றப்படவில்லை,

டேங்கர் லாரி செல்ல முடியாத இடத்தில், டேங்கர் லாரி மூலம் கழிவுகளை அகற்றியதாகவும், கழிவுநீர்த்தொட்டி புதர் மண்டிக் கிடக்கிறது என்றும் குறிப்பிட்டு, கழிவறைகளை முறையாக பராமரிக்காமல் ரூ. 38000/–செலவுகணக்குகாட்டி கையாடல் செய்துள்ளார் என்றும் எனவே கையாடல் செய்த பேரூராட்சி அலுவலர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் தெரிவித்துள்ளார். இதற்கான ஆதாரமாக 28.04.2023 அன்று எடுக்கப்பட்ட புகைப்படங்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டு 5.3.2023 முதல் 14.03.2023 வரை நடைபெற்ற மாசிக்கொடை விழாவினை முன்னிட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிவுரையின்படியும் பேரூராட்சி மன்றத் தலைவரின் முன்அனுமதி பெறப்பட்டு பேரூராட்சி மன்ற தீர்மானம் எண். 239, நாள் 30.1.2023ன்படி புதார் கழிவறைகள் பராமரிப்புப்பணிகள் ரூ.38,000/– செலவில் செய்யப்பட்டன என்றும் இப்பணிகளில் முறைகேடுகள் ஏதும் நடைபெறவில்லை என்றும் செயல் அலுவலரின் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் தமது புகார் மனுவுடன் அளிக்கப்பட்ட திருவிழாவுக்குப் பின்னர் அதாவது 28.4.2023 அன்று எடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டு இம்முறைமன்றத்தில் அளிக்கப்பட்ட புகைப்படங்களில் கழிவறைகளில் எந்தவித பராமரிப்புப் பணிகளும் நடைபெறவில்லை என்பதை அறிய முடிகிறது. மேலும் கீழ்க்கண்ட குறைபாடுகளையும் அறிய முடிகிறது.

(i) கழிவு நீர்த்தொட்டி புதர் மண்டிக்கிடக்கிறது, சுத்தம் செய்ததற்கான அறிகுறிகள் ஏதுமில்லை;
(ii) கதவு பழுதடைந்த நிலையிலேயே உள்ளது;
(iii) மேற்கூரை சிமெண்ட் பூசப்படாமல் உடைந்த நிலையிலேயே உள்ளது;
(iv) தண்ணீர் குழாய் இணைக்கப்படவே இல்லை, உடைந்த நிலையிலேயே உள்ளது.

மேற்கண்ட குறைபாடுகளை சரிசெய்யாமல் பேரூராட்சியின் நிதி விரயம் செய்யப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது.

இந்நேர்வில் பொறுப்பான அலுவலரை நேரில் அனுப்பி ஆய்வு செய்வதன் மூலமே பராமரிப்புப் பணிகள் நடைபெற்ற விவரங்கள் குறித்து அறிய முடியும். எனவே துறையின் பொறுப்பான உயர் அலுவலரை நியமித்து மண்டைக்காடு மாசிக்கொடை விழா நடைபெற்ற நாட்களில் (அதாவது 5.3.2023 முதல் 14.03.2023 வரை) கல்லுக்கூட்டம் பேரூராட்சியால் கழிவறைகள் முறையாக சுத்தம் செய்து பராமரிக்கப்பட்டதா என்ற விவரத்தையும், செலவு செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்பட்ட தொகையான ரூ.38000/–ஐ முறையான வழியில் செலவு செய்யப்பட்டதா என்ற விவரத்தையும் களஆய்வு செய்து பேரூராட்சி நிதி முறைகேடாக செலவு செய்யப்படாமலேயே செலவு கணக்கில் கொண்டு வரப்பட்டிருப்பின்

சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, அதன் விவரத்தை 30 நாட்களுக்குள் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்றம் நடுவம் ஆணையிடுகிறது.

இதில் செலவின ரசீதுகளையும் பணிஒதுக்கீட்டுக் கோப்புக்களையும் ஆராய உள்ளாட்சித் தணிக்கை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். இப்பணி ஒரு (1) மாத காலத்தில் முடிக்கவும் ஆணையிடப்படுகிறது.

2023–ஆம் ஆண்டு, ஜுலை 15–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒப்பம்./–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
1)திரு.ச.சேம்ரூபன்
கோணம்காடு,
கோணம்காடு–629803
கன்னியாகுமரி மாவட்டம்

2)செயல் அலுவலர்,
கல்லுக்கூட்டம் பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்

3)பேரூராட்சிகளின்இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 28.

4)இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர்
(Nodal Officer)(பெயரிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை –600 028.

நகல்,
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

உதவிப் பதிவாளர்.